***கவனிக்க.*- *17.06.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1712 - 2011 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2011.06.24**

*1712 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 50 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.*- (i) *மடஹபொல ஸ்ரீ ரத்னபால ராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, யூலை 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *இலங்கை உளவியல் கழகம் கூட்டிணைத்தல் சட்டமூலம் 2011, யூன் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூன் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## சித் செவன மன மந்த புத்தியுள்ள சிறுவர் அபிவிருத்தி அமைப்பு கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திலங்க சுமதிபால, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சித் செவன மன மந்த புத்தியுள்ள சிறுவர் அபிவிருத்தி அமைப்பு கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த சட்டத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. மன மந்த புத்தியுள்ள சிறுவர்களுக்கான கல்வியும், தொழிற்கல்வியும், சமய, கலாசார, சமூக விளையாட்டு ஆகிய நோக்கங்களை முன்வைத்து எதிர்காலத்தை பாதுகாத்தல் ;

2. மன மந்த புத்தியுள்ள பிள்ளைகளின் தொழிற் திறமைகளை விருத்தி செய்து அவர்களை சமுதாயத்தில் ஒன்று சேர்த்தல். மன மந்த புத்தி வயதானவர்களுக்கு விடுதி நிலையங்களை அமைத்து விடுதி வசதிகளை பெற்றுக் கொடுத்தல் ;

3. எமது அமைப்பிற்குரிய நிலையங்களில் சேர்த்துக் கொள்ளல் முடியாத பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு அவர்களின் தொழிற் திறமைகளை கவனித்து சிறு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு பொருள் அல்லது பணம் மூலம் உதவிகளை செய்து கொடுத்தல்.

பிறவும்.

திலங்க சுமதிபால,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

6-512

---

## மெத் சேவை அடித்தாளம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திலங்க சுமதிபால, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "மெத் சேவை அடித்தாளம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த சட்டத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. தற்செயலாக அல்லது இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டவர்களுக்கு உதவிகள் பெற்றுக்கொடுத்தல் ;

2. விசேட நோய் உள்ள வறியவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொடுத்தல். வைத்திய முகாம்/பிணி ஆய்வு நடாத்துதல் ;

3. கல்வி கற்கும் வறிய பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் விரிவுரைகள் மேலதிக வகுப்புக்கள் நூலக வசதி பெற்றுக் கொடுத்தல், சரீர, மன விருத்திக்கு வகுப்புக்கள் நடாத்துதல்.

பிறவும்.

திலங்க சுமதிபால,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

6-513

---

## கணக்குகளை தீர்த்து ஒடுக்கி விடுவது சம்பந்தமான அறிவிப்பு

## சிவில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக (கொழும்பில் நடைபெற்ற) மேல் மாகாண சபை நீதிமன்றத்தில்

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கமிடப்பட்ட கம்பனிகள் சட்டத்தில் இல. : 270 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படும் வேண்டுகோள் விடயத்தில்
இல. 167/8/ஏ, நிலம்மஹர வீதி, பொரலஸ்க முவை எனும் முகவரியைச் சேர்ந்த

(1) திசாநாயக்க முதியன்சேலாகே விமலசிரி
(2) மாத்தரகே சுசித்தரா பிரியதர்ஷினி

வழக்கு இல. HC (Civil) 20/2011
தன்மை : CO
செயல்முறை : சுருக்கம்
பெறுமதி : ரூபா 2,032,750

ஆகிய இருவர் விடயத்திலும் ;

............. மனுதாரர்கள்

எதிராக

செலிங்கோ பிரின்டிங் அன்ட் ஸ்டேஷனரி (தனியார்) கம்பனி, இல. 257, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

................ எதிராளி

சிவில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கொழும்பில் நடாத்தப்பட்ட மேல் மாகாண சபை நீதிமன்றத்தில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளி நிறுவனம் கணக்குகளை தீர்த்து ஒடுக்குவதற்காக பொரலஸ்கமுவ, நிலம்மஹர வீதி, இல. 167/8/ஏ, இடப்பட்ட இடத்தில் வசிக்கும் திசாநாயக்க முதியன்சேலாகே விமலசிரி மற்றும் மாத்தரகே சுசித்தரா பிரியதர்ஷினி ஆகிய மனுதாரர்களால் 2011, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி குறிப்பிட்ட நீதிமன்றத்திற்கு மனுவை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த மனு 2011 ஏப்பிறல் 27 அந் திகதி நீதிமன்றத்திற்கு முன் உறுதிப்படுத்தப்பட்டு அதனை ஒடுக்குவதற்கான ஏற்றுக்கொள்ள பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மேல்குறிப்பிடப்பட்ட எதிராளி நிறுவனம் ஒடுக்குவதற்குச் சார்பாக ஆதரவளிப்பதற்கு அல்லது அதற்கு எதிராக ஆதரவளிக்காமல் இருப்பதற்கு (ஒடுக்குவதற்கு எதிரான) விருப்பத்தை தெரிவிக்கும் சகலரும் குறிப்பிட்ட நிறுவனத்தின் கடனாளிகள் அல்லது தமது சட்டத்தரணியின் மூலம் முன்வர

முடியுமென்றும், மனுவின் பிரதியொன்றை தேவையான நிறுவனத்தின் யாராலுமோ, கடனாளி ஒருவருக்கு அல்லது பங்காளி ஒருவருக்கு உரியதொகையை அளிப்பதன் மூலம் கீழே கையொப்பமிடுபவர் களினால் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது :-

சட்டத்தரணி புத்திக சேரசிங்க,
இல. : 34/53, சட்டத்தரணி அலுவல்கள் தொகுதி,
சென். செபஸ்தியன் மேடு,
கொழும்பு 12.

**குறிப்பு**.- குறிப்பிட்ட மனு சம்பந்தமாக விசாரணை செய்யும்போது முன்வர எண்ணியிருக்கும் யாராவது அல்லது தனிநபர் அப்படிச் செய்வதற்கு இருக்கும் எண்ணத்தை மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணி புத்திக சேரசிங்க இல. : 34/53, சட்டத்தரணி அலுவல்கள் தொகுதி, சென். செபஸ்தியன் மேடு, கொழும்பு 12, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் தெரிவித்து கையளிக்க வேண்டும் இல்லாது போனால் தபாலிட வேண்டும். அறிவிப்பவர் தனிநபரானால், பெயரும் விலாசமும் அல்லது நிறுவனமொன்றானால் நிறுவனத்தின் பெயரும் விலாசமும் அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு தனிநபரோ அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது, அவர்களினது (சட்டத்தரணியொருவர் இருந்தால்) சட்டத்தரணியாலோ கையெழுத்திட வேண்டும் என்பதோடு 2011.07.10 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு முன்னர் கையளிக்க வேண்டும் அல்லது தபாலில் அனுப்புவதாக இருந்தால் போதுமான கால அவகாசத்திற்குள் (மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) கிடைக்கும் வகையில் தபாலில் இடவேண்டும்.

புத்திக சேரசிங்க,
சட்டத்தரணி.

6-556

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.